**Petition under Right to Information Act 2005**

Savitha .T
New #246 (Old #277B), TTK Road (J.J. Road), Alwarpet,
Chennai - 600 018.

Chennai
22.03.19

PIO,
Police Department,
Thanjavur.

Dear Sir,
**Sub: Seeking Information under RTI Act 2005**

I am an Indian citizen and I seek the following information under the Right to Information Act 2005. I have affixed the fees of Rs. 10 court fees stamp on this letter. I am also ready to pay any other charges that I am required to pay under the Act for photocopies, CDs, etc. Kindly provide the information sought in soft copy (such as CD/DVD) if possible.

For the years 2013-2014, 2014-2015, 2015-2016, 2016-2017 and 2017-2018, please provide the following information for Thanjavur district:

1. Road safety budget allocated to the district, amount spent and list of works on which it was spent
2. Dates, start and end time, and venue of DRSC meetings and minutes of the meetings
3. Cost of conducting/ hosting each DRSC meeting
4. Copy of the District Road Safety Action Plan
5. Copy of reports filed to the State Government on the work done by the DRSC

Thanking you,

Savitha .T

6 MAY 2019

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திருமதி.இரா.முத்துமீனாட்சி, எம்.சி.ஏ., எம்ஃபில், பி.எட்., பொது தகவல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), தஞ்சாவூர். | T. சவிதா<br>New #246 (Old#277B),<br>TTK Road, JJ Road,<br>Alwarpet,<br>Chennai – 600 018 |
| மு.மு.13341/2019/இ2 நாள். 30.04.2019 | |

| | |
|---|---|
| பொருள் | தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005-தஞ்சாவூர் மாவட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் பிரிவு 6(1)ன் கீழ் பெறப்பட்ட மனுக்கள்-தொடர்பாக தகவல்அறியும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் தகவல் கோரியது- தகவல் அளிப்பது-தொடர்பாக |
| பார்வை | 1) தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கடித எண் தொமுதப 429/2019/ஆ2 நாள் 11.04.2019<br>2) மனுதாரர் T. சவிதா என்பவரது மனு நாள். 26.03.2019 |

********

பார்வையில் காணும் விண்ணப்பத்தில் மனுதாரர் T. சவிதா என்பவர் தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005ன் கீழ் மாவட்ட சாலை பாதுகாப்பு கமிட்டி செயலாக்கம் தொடர்பாக நகல்கள் வழங்கிட கோரியுள்ளார்.

தாங்கள் கோரிய விபரங்கள் 5 பக்கங்கள் உள்ளது. நகல் வழங்கிட ஒரு பக்கத்திற்கு ரூ.2/-வீதம் 5X2=ரூ.10/- மட்டும் வங்கி அல்லது கருவூலத்தில் கீழ்கண்ட கணக்கு தலைப்பில் தொகை செலுத்தி அசல் செலுத்து சீட்டினை இவ்வலுவலகத்தில் தாக்கல் செய்தால் நகல் வழங்கப்படும் என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது.

<u>கணக்கு தலைப்பு</u>

"0070. Other Administrative Services – 60. Other Services – 118 Receipts under Right to Information Act, 2005 – AA – Collection of fees under Right to Information (Fees) Rules 2005"
(DPC 0070 60 118 AA 0005).

ஓம்/-இரா.முத்துமீனாட்சி
பொது தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது)
தஞ்சாவூர்.

/ஆணைப்படி/

30/4/19
அலுவலக மேலாளர் (குற்றவியல்)

30/4/19

26.08.19

/பதிவஞ்சலில் /

| | |
|---|---|
| அனுப்புநர்<br>திருமதி.இரா.முத்துமீனாட்சி, எம்.சி.ஏ., எம்ஃபில், பி.எட்.,<br>பொது தகவல் அலுவலர் மற்றும்<br>மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது),<br>தஞ்சாவூர். | பெறுநர்<br>T. சவிதா<br>New #246 (Old#277B),<br>TTK Road, JJ Road,<br>Alwarpet,<br>Chennai – 600 018 |

மூ.மு.13341/2019/இ2 நாள். 22.08.2019

| | |
|---|---|
| பொருள் | தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005-தஞ்சாவூர் மாவட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் பிரிவு 6(1)ன் கீழ் பெறப்பட்ட மனுக்கள்-தொடர்பாக தகவல்அறியும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் தகவல் கோரியது- தகவல் அளிப்பது-தொடர்பாக |
| பார்வை | 1) தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கடித எண் தொமுதப 429/2019/ஆ2 நாள் 11.04.2019.<br>2) மனுதாரர் T. சவிதா என்பவரது மனு நாள். 26.03.2019 மற்றும் 09.08.2019. |

-----------

பார்வையில் காணும் விண்ணப்பத்தில் மனுதாரர் T. சவிதா என்பவர் தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005ன் கீழ் கோரிய விபரங்கள் பின்வருமாறு அளிக்கப்படுகிறது.

| வ. எண் | மனுதாரர் கோரிய தகவல்கள் | மனுதாரருக்கு வழங்கப்படும் தகவல்கள் |
|---|---|---|
| 1 | மாவட்ட சாலை பாதுகாப்புக்கு வழங்கப்பட்ட நிதி விவரங்கள். | 2012-13 - ரூ.32,80,000, 2013-14 - ரூ.37,75,748<br>2014-15 - ரூ.15,64,685, 2015-16 - ரூ.50,80,000<br>2016-17 - ரூ.35,80,000, 2017-18 - ரூ.38,94,500 |
| 2 | மாவட்ட சாலை பாதுகாப்பு கமிட்டியின் கடைசியாக கூட்டம், நடைபெற்ற நாள், தொடங்கிய மற்றும் முடிவுற்ற நேரம் மற்றும் இடம் தொடர்பான விவரங்கள் | தஞ்சாவூர் மாவட்டத்தில் சாலை பாதுகாப்பு கூட்டம் 23.10.2018 அன்று மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக பிரதான கூட்ட அரங்கில் மாலை 4.30 மணி முதல் 5.30 மணி வரை நடைபெற்றது. |
| 3 | மாவட்ட சாலை பாதுகாப்பு கமிட்டி செயலாக்கம் தொடர்பாக நடைபெறும் கூட்டத்திற்கு ஆகும் செலவின விவரங்கள். | மாவட்ட சாலை பாதுகாப்பு கமிட்டி செயலாக்கம் தொடர்பாக நடைபெறும் கூட்டத்திற்கு செலவினங்களுக்காக நிதி ஒதுக்கீடு கிடையாது. |

| | | |
|---|---|---|
| 4 | மாவட்ட சாலை பாதுகாப்பு கமிட்டியின் நடைபெற்ற கூட்டம் தொடர்பான விவரங்கள் மற்றும் கலந்து கொண்டோரின் கருத்துக்கள், கோரிக்கைகள் ஒளிநகல்கள் வழங்கவும். | அக்டோபர் 2018 மாத சாலை பாதுகாப்பு கூட்ட நடவடிக்கை குறிப்புகள் இணைக்கப்பட்டுள்ளது. |
| 5 | மாவட்ட சாலை பாதுகாப்பு கமிட்டி செயலாக்கம் தொடர்பாக அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்ட பணி விவரங்கள். | அரசுக்கு அனுப்பிய அக்டோபர் 2018 மாத சாலை பாதுகாப்பு கூட்ட நடவடிக்கை குறிப்புகள் இணைக்கப்பட்டுள்ளது. |

22.8.19

பொது தகவல் அலுவலர் மற்றும்
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது)
தஞ்சாவூர்.

22/08/19

நகல் தலைமை உதவியாளர், 'ஆ' பிரிவு,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
தஞ்சாவூர். (தொமுதப 429/2019/ஆ2 நாள் 11.04.2019 )

தஞ்சாவூர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாக கூட்ட அரங்கில் 23.10.2018 அன்று பிற்பகல் 5.00 மணியளவில் நடைபெற்ற அக்டோபர் – 2018 மாத சாலை பாதுகாப்பு கூட்ட நடவடிக்கை குறிப்புகள்

முன்னிலை: திரு. ஆ. அண்ணாதுரை, இ.ஆ.ப.,

ந.க.எண். 897/ 2017 / இ2 நாள். 30.10.2018

சாலைப்பாதுகாப்பு கூட்டத்தில் கீழ்கண்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

1) மாவட்ட காவல் கண்காணிப்பாளர், தஞ்சாவூர்
2) மாவட்ட வருவாய் அலுவலர், தஞ்சாவூர்
3) மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), தஞ்சாவூர்
4) வருவாய் கோட்ட அலுவலர், தஞ்சாவூர் / பட்டுக்கோட்டை
5) உதவி ஆணையர் (கலால்), தஞ்சாவூர்
6) மாவட்ட மேலாளர் (டாஸ்மாக்), தஞ்சாவூர் கோட்ட மேலாளர்,
7) தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், தஞ்சாவூர். சார்பாக பிரதிநிதி
8) காவல் துணை கண்காணிப்பாளர், DCRB, தஞ்சாவூர்.
9) காவல் துணை கண்காணிப்பாளர்கள், தஞ்சாவூர் மாவட்டம்
10) ஆணையாளர், தஞ்சாவூர் மாநகராட்சி சார்பாக பிரதிநிதி திட்ட அலுவலர், நகரமைப்பு, தஞ்சாவூர்.
11) நகராட்சி ஆணையர், கும்பகோணம் /பட்டுக்கோட்டை.
12) அனைத்து வட்டாட்சியர்கள், தஞ்சாவூர் மாவட்டம்
13) கோட்ட கலால் அலுவலர், தஞ்சாவூர் / கும்பகோணம் / பட்டுக்கோட்டை
14) உதவி பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, தஞ்சாவூர்.
15) உதவி பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை, தஞ்சாவூர்
16) துணை போக்குவரத்து ஆணையர், தஞ்சாவூர்.
17) வட்டார போக்குவரத்து அலுவலர், தஞ்சாவூர் / கும்பகோணம் / பட்டுக்கோட்டை
18) ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர், (ஊராட்சிகள்) தஞ்சாவூர் சார்பாக வட்டார வளர்ச்சி அலுவலர்
19) உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) தஞ்சாவூர் சார்பாக பிரதிநிதி
20) தனிப்பிரிவு, காவல் ஆய்வாளர், தஞ்சாவூர்.
21) காவல் ஆய்வாளர், போக்குவரத்து ஒழுங்கு பிரிவு, தஞ்சாவூர்.
22) திட்ட இயக்குனர், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம், தஞ்சாவூர் / காரைக்குடி சார்பாக பிரதிநிதி.
23) செயலாளர், தஞ்சாவூர் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு சங்கம், தஞ்சாவூர்
24) தலைவர், தஞ்சை மாவட்ட கிராமப்புற நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம், சுவாமிமலை
25) தலைவர், தஞ்சாவூர் தாலுகா நுகர்வோர் விழிப்புணர்வு அறக்கட்டளை, தஞ்சாவூர்
26) மற்றும் தொடர்புடைய நபர்கள்

சாலைப்பாதுகாப்பு குறித்த மாதாந்திர ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொள்ள வருகை தந்திருந்த அனைத்து அலுவலர்கள் / இதர அமைப்பினைச் சேர்ந்தவர்களை மாவட்ட ஆட்சியர் அவர்கள் முதற்கண் வரவேற்று பேசினார். சாலை பாதுகாப்பினை உறுதி செய்வதில் வருவாய்த்துறை, காவல்துறை, போக்குவரத்துத்துறை, பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரும் இணைந்து பணியாற்றுவது மிகவும் அத்தியாவசியமானது என்றும், சாலைகளில் நிகழும் விபத்துக்களால் ஏற்படும்

உயிரிழப்பினை முற்றிலுமாக தவிர்க்கும்பொருட்டு அனைத்து தரப்பிலும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும், இந்நேர்வில் கடந்த ஆண்டைக்காட்டிலும் நடப்பு ஆண்டில் விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்தபோதிலும் இறப்பு விகிதம் கணிசமாக குறைந்துள்ளது எனவும், சாலை பாதுகாப்பு பணிகளில் சிறப்பாக பணியாற்றி வரும் காவல்துறை, வட்டார போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் நுகர்வோர் சங்கங்கள் அவ்வப்போது சாலை பாதுகாப்பு குறித்த பொதுமக்கள் நலன் சார்ந்த கருத்துக்களை தொடர்ச்சியாக தெரிவித்து வரும் நிலையில் சம்மந்தப்பட்ட துறையினரால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதெனவும், எனவேதான் இறப்பு விகிதம் குறைந்துள்ளது என்றால் மிகையாகாது எனவும், சாலை பாதுகாப்பு பணிகளில் முக்கிய பங்காற்றி வரும் அலுவலர்கள் மற்றும் நுகர்வோர் சங்கங்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களால் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

- ✓ அனைவரும் நான்கு சக்கர வாகனங்களில் Seat Belt மற்றும் இரண்டு சக்கர வாகன ஓட்டுநர் மற்றும் பின் இருக்கை பயணிகள் ஆகியோர் தலைக்கவசம் அணிவதை உறுதி செய்தல் வேண்டும்.
- ✓ சாலை விதிகளை வழுவாது கடைபிடிக்கவும், அவற்றை மதித்து பின்பற்ற வேண்டும்.
- ✓ சாலையோரங்களில் உள்ள அனுமதியில்லாத தள்ளுவண்டி மற்றும் தரைக்கடைகள் ஆகியவற்றை ஆக்ரமணங்களாக கருதி அவற்றை அகற்றிட துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- ✓ அதிவேகமாக வாகனங்கள் செலுத்துவதை முற்றிலுமாக தவிர்த்தல் வேண்டும்.
- ✓ வாகனங்களுக்கிடையே குறிப்பிட்ட இடைவெளியில் பயணம் செய்தல் வேண்டும்.
- ✓ சாலை விதிகளை மீறி பயணம் செய்யும் நபர்களின் வாகனங்கள் கைப்பற்றுகை செய்திடவும், வாகன உரிமம் மற்றும் ஓட்டுநர் உரிமத்தினை தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக ரத்து செய்திட உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- ✓ சாலை பாதுகாப்பு குறித்து காவல்துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விபரத்தினை சாலை பாதுகாப்பு கூட்டத்தில் (Power Point Presentation மூலமாக) ஆய்வு செய்திட ஏதுவாக எடுத்துரைக்க வேண்டுமெனவும், காவல்துறையின் சார்பில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் நிலையில் பணிபுரியும் அலுவலர் ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.

<u>நுகர்வோர் பாதுகாப்பு சங்கங்கள் சார்பாக கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.
திரு.சுந்தரவிமலநாதன், திரு.கலியமூர்த்தி, திரு. இன்பம், திரு. குழந்தைவேலு, திரு. சிவானந்தம் மற்றும் பிறர்</u>

- ❖ தஞ்சாவூர், கும்பகோணம் வட்டங்களில், பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள நகைக்கடைகள் மற்றும் ஜவுளிக்கடைகளின் விளம்பர பலகைகளை (Unauthorised Hoardings) அகற்றிட துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தஞ்சாவூர் மற்றும் கும்பகோணம் நகராட்சி ஆணையர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

- கும்பகோணம் - கொள்ளிடம் பகுதிகளில் இருசக்கர வாகனங்கள் மூலம் மணல் மூட்டைகள் கொண்டு செல்லப்படுகின்றன எனவும் இதுதொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.
- அணைக்கரை பாலத்தில் பேருந்துகள் இயக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.
- கும்பகோணம், வலையப்பேட்டை, மாங்குடி சாலைகள் குண்டும் குழியுமாக உள்ளதெனவும், மேற்படி சாலையினை செப்பனிடுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.
- கொள்ளிடக்கரையில் கனரக வாகனங்கள் செல்வதற்கு தடை விதித்திடவும், மேற்படி கொள்ளிடக்கரையில் இருப்பிலான உயர் குறுக்குத் தடுப்புகள் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.
- கும்பகோணம் நகராட்சியில் காவல்துறையின் சார்பில் ஒலிப்பெருக்கி மூலம் போக்குவரத்தினை ஒழுங்கு செய்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.
- தஞ்சாவூர் ரயில்நிலையம் - பழைய பேருந்து நிலையம் வரை உள்ள காந்திஜி சாலையில் பூமாலை கடைகள் அமைத்து ஆக்ரமிப்பு செய்யப்பட்டுள்ளதெனவும், மேற்படி பகுதிகளில் உள்ள ஆக்ரமிப்புகளை அகற்றிட துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.
- நகரப்பேருந்துகளை ரயில்வே ஸ்டேஷன் மேரிஸ்கார்னர் வழியாக இயக்கிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.
- அணைக்கரை பாலத்திலிருந்து சென்னை செல்லும் வழித்தடங்களை இணைப்பு செய்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.
- தனியார் பேருந்துகள் இயக்கும் நேரத்தை சரிவர கடைபிடிப்பதில்லை எனவும், தனியார் பேருந்துகள் குறிப்பிட்ட இடைவெளியில் செல்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.
- பள்ளி - கல்லூரிகளில் மாணவ-மாணவியர்களுக்கு சாலை பாதுகாப்பு விதிமுறைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.
- சீமாட்டி, மகாராஜா, சென்னை சில்க்ஸ் போன்ற ஜவுளிக்கடைகளில் வாகன போக்குவரத்திற்கு இடையூறாகவும், எதிர்வரும் வாகனங்களை கண்டறிய முடியாத வகையில் பிளக்ஸ் போர்டுகள் வைக்கப்பட்டுள்ளது எனவும், தஞ்சாவூர் மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வைக்கப்பட்டுள்ள பிளக்ஸ் போர்டுகளை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.
- பாபநாசம் பேரூராட்சி பகுதிகளில் மழைக்காலங்களில் சாக்கடை கழிவுநீர் தேங்கி சுகாதார கேடு விளைவிப்பதாகவும், தரமான சாலைகள் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

- கும்பகோணம் - திருவாரூர் செல்லும் சாலையில் சாக்கோட்டை பகுதியில் ஆபத்தான பகுதி என அறிவிப்பு பலகை அமைத்திட வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.
- சக்கராப்பள்ளி, அய்யம்பேட்டை, கண்டியூர், திருக்காட்டுப்பள்ளி ஆகிய பகுதிகளில் சாலை அமைத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.
- பாபநாசம் - கணபதி அக்ரஹாரம் வரை CTM என்ற மினிபேருந்து இயக்கிட தெரிவிக்கப்பட்டது.
- பள்ளியக்ரஹாரம், கருந்தட்டான்குடி பகுதிகளில் பயன்பாட்டில் இல்லாத தொலைபேசி கம்பங்களை அகற்றிட அறிவுறுத்தப்பட்டது.
- பாபநாசம் வட்டத்தில், டாடா ஏசி-ல் அதிகளவில் பொதுமக்களை ஏற்றிச்செல்வதாகவும், சாலைகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால் போக்குவரத்தினை சீர்படுத்திடும்பொருட்டு சிசிடிவி கேமராக்கள் பொருத்தி கண்காணித்திட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது.
- சாலை போக்குவரத்தினை கண்காணிக்கும்பொருட்டு வைக்கப்பட்டுள்ள சிசிடிவி கேமராக்கள் செயல்படவில்லை எனவும், அவற்றை சரிசெய்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.
- கும்பகோணம் - கண்டியூர், குத்தாலம் - திருப்பாலத்துறை செல்லும் சாலைகளில் கண்ணாடி இழை கேபிள் புதைப்பதற்காக தோண்டப்பட்ட குழிகள், பணிகள் நிறைவுற்ற பின்னரும் மூடப்படாமல் உள்ளதெனவும், இதுதொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.
- திருப்பாலத்துறை சாலையோரங்களில் தரமான மின்கம்பங்கள் அமைத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.
- தஞ்சாவூர் - கும்பகோணம் தேசிய நெடுஞ்சாலையில் பாபநாசம் திருப்பாலத்துறையில் சாலை ஓரத்தில் நவ்பாரத் டிரான்ஸ்பார்மர் உள்ளது எனவும், டிரான்ஸ்பார்மருக்கு அருகில் உள்ள நிலத்தின் உரிமையாளர் டிரான்ஸ்பார்ம் மற்றும் அரசு புறம்போக்கு இடத்தையும் சேர்த்து கம்பிவேலி அமைத்து ஆக்ரமித்துள்ளார் எனவும், மேற்படி ஆக்ரமிப்புகளை அகற்றி, டிரான்ஸ்பார்மரை மீட்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.
- கும்பகோணம் - நீலத்தநல்லூர் சாலை (பாலக்கரை) மற்றும் திருப்பனந்தாள் - சோழபுரம் பகுதிகளில் உள்ள ஆக்ரமிப்புகளை அகற்றிட துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.
- கும்பகோணம் காமராஜ் நகரில் பாகமேட்டுத்தெரு வாய்க்கால் சாலையை ஒட்டி செப்டிக்டேங்க் கட்டப்பட்டுள்ளது. மேற்படி ஆக்ரமிப்பினை அகற்றி, வாய்க்காலை மீட்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.
- தஞ்சாவூர் - கும்பகோணம் செல்லும் தேசிய நெடுஞ்சாலை குண்டும் குழியுமாக உள்ளதெனவும், மேற்படி சாலையினை செப்பனிடுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.

<u>பொது</u>

- சாலையோரங்களில் கனரக வாகனங்களை நிறுத்தி வைத்துவிட்டு செல்லக்கூடாது எனவும், விதிமீறல்கள் இருப்பின் வாகனங்கள் கைப்பற்றுகை செய்து மேல்நடவடிக்கை தொடர வேண்டுமென வட்டார போக்குவரத்து அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.
- புதுக்குடி, முன்னையம்பட்டி, மாரியம்மன்கோயில் பைபாஸ் சாலையின் மையப்பகுதியில் அதிவேகமாக வாகனங்கள் செல்லும்போது ஒளிரும் வகையில் மின்விளக்குகள் பொருத்திட வேண்டுமென தொடர்புடைய அலுவலருக்கு தெரிவிக்கப்பட்டது.
- தஞ்சாவூர் நகரப்பகுதிகளில் மினிபேருந்துகள் சாலை விதிகளை பின்பற்றாமல் பேருந்துகளை இயக்குவதாகவும், சாலை விதிகளை மீறி இயக்கப்படும் பேருந்துகளின் உரிமங்களை ரத்து செய்திட வேண்டுமென வட்டார போக்குவரத்து அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.
- தஞ்சாவூர் மாவட்டத்தில் விபத்துகள் எண்ணிக்கை மற்றும் இறப்பு விகிதத்தினை வெகுவாக குறைக்கும் வகையில் பள்ளி, கல்லூரிகள் மற்றும் பொதுமக்கள் அதிகளவில் கூடும் இடங்களில் (கிராம அளவில்) சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.
- அனைத்து காவல் துணைக்கண்காணிப்பாளர்களும் சாலை பாதுகாப்பு குறித்து ஆய்வு செய்து, போக்குவரத்தினை ஒழுங்கு செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது.
- தஞ்சாவூர் மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள விளம்பர பலகைகள் மற்றும் விளம்பர போர்டுகள் ஆகியவற்றை அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.
- தஞ்சாவூர், கும்பகோணம், பட்டுக்கோட்டை மற்றும் பேராவூரணி பகுதிகளில் கட்சி, சாதி மற்றும் சினிமா விளம்பரங்கள் ஒட்டப்பட்டுள்ளதெனவும், அவற்றை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.
- டாடா ஏஸ் வாகனம் மூலம் இரும்புக்கம்பி மற்றும் அதிகளவில் பொதுமக்களை ஏற்றிச்செல்கிறார்கள் எனவும், இதுதொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.
- கடற்கரையோர கிராமங்களில் ECR சாலைகளில் மின்விளக்குகள் ஒளிர்வதில்லை எனவும், குண்டும் குழியுமாக உள்ள சாலையினை செப்பனிடுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.
- கும்பகோணம் - பட்டுக்கோட்டை தேசிய நெடுஞ்சாலைகள், தஞ்சாவூர் மெடிக்கல் காலேஜ், மதுக்கூர், சத்திரம், கண்டியூர், தஞ்சாவூர் - நாகப்பட்டிணம், அய்யம்பேட்டை, சாலியமங்கலம், பூண்டி, பாபநாசம் பகுதிகளில் உள்ள பட்டுப்போன மரங்களை அகற்றிட வேண்டுமென திட்ட இயக்குநருக்கு (நகாய்) அறிவுறுத்தப்பட்டது.

- கும்பகோணம் வட்டத்தில், தனியார் பேருந்துகள் குறிப்பிட்ட இடைவெளியில் பயணம் செய்திட ஏதுவாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கு கூட்டம் நடத்தி, தக்க அறிவுரைகள் வழங்கிட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.
- மாநில / தேசிய நெடுஞ்சாலைகளில் இரு மற்றும் நான்கு சக்கர வாகனங்களில் பயணிக்கும் தூரம் குறித்து அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது எனவும், வாகன ஓட்டிகள் பயணிக்கும் தூரத்தை செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மாநில / தேசிய நெடுஞ்சாலைத்துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டது.
- தஞ்சாவூர், பட்டுக்கோட்டை, பாபநாசம் பகுதிகளில் உள்ள விளம்பர பலகைகளை அகற்றிட துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.
- தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள சாலை பாதுகாப்பு மேற்கொள்ளும் அலுவலர்கள் அனைவரும் தங்களது பணிகள் அனைத்தும் உயிர்காக்கும் உன்னதப்பணி என்பதை உணர்ந்து செயல்பட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டது. சாலை விபத்துகள் மூலம் ஏற்படும் உயிர் இழப்புகளை தடுக்கும் பணிகளில் தனிக்கவனம் செலுத்திட வேண்டுமெனவும் தொடர்புடைய அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.
- நுகர்வோர் பாதுகாப்புச் சங்கங்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து இனங்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும், இதுதொடர்பாக பிரதி மாதம் நடைபெறும் ஆய்வுக்கூட்டத்தில் Action taken Report அளித்திட வேண்டுமெனவும் தொடர்புடைய அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.
- சாலை பாதுகாப்பு தொடர்பாக பிரதி மாதம் கோட்ட மற்றும் வட்ட அளவிலான Task Force Committee கூட்டம் நடத்தி, கூட்ட நடவடிக்கை குறிப்பினை மாவட்ட ஆட்சியரகத்திற்கு அனுப்பிவைத்திட வேண்டுமென வருவாய் கோட்ட அலுவலர்கள் மற்றும் வட்டாட்சியர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.
- அனைத்து அலுவலர்களும் தலைக்கவசம் மற்றும் Seat Belt -ஐ கட்டாயமாக அணிய வேண்டுமெனவும், இதற்கு நாம் முதலாவதாக முன் உதாரணமாக செயல்படுவது அவசியம் எனவும் அனைத்து அலுவலர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டன.

(ஒம்)ஆ.அண்ணாதுரை
மாவட்ட ஆட்சியர்,
தஞ்சாவூர்.

//ஆணைப்படி//

8/11/18

மாவட்ட ஆட்சியருக்காக
தஞ்சாவூர்.

08/11/18

பெறுநர்

தொடர்புடைய அலுவலர்கள்.

நகல் 1) அரசு கூடுதல் தலைமை செயலர், உள்துறை, தலைமை செயலகம், சென்னை.
2) போக்குவரத்து ஆணையர், போக்குவரத்து துறை, எழிலகம், சேப்பாக்கம், சென்னை.